**கொடகவெல பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 18 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கொடகவெல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நூலகம் மற்றும் சுகாதார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கிடைத்த கடன் பணத்திற்காகச் சீராக்கப்பட்டிருந்த மூலதன வட்டி ரூபா 618,972 கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய பக்கோ இயந்திரம் சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டதன் மூலம் ரூபா 1,949,795 தொகையும் வாடகைக்கு வழங்கப்பட்டதன் மூலம் ரூபா 467,650 தொகையுமாக ரூபா 2,417,445 கூட்டுத்தொகையான வருமானம் இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது வாணிபக் கணக்கின் முக்கிய கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 2,004,260 ஆனமையால் ரூபா 413,185 தொகையான வருமானம் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்கு உரித்தான ரூபா 48,600 தொகையான செலவினத்திற்காக கடன்கொடுத்தோர் மீதியின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

கடன்கொடுத்தோர் மீதியில் நிலவிய மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டிலிருந்து நிலவிய ரூபா 506,477 தொகையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,779,362 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,073,126 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| -------------------- | -------------- | -------------- | -------------- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| | (000) | (000) | (000) |
| வீதவரியும் வரியும் | 3,072 | 3,151 | 623 |
| வாடகை | 8,001 | 7,828 | 306 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 593 | 1,061 | 95 |
| ஏனைய வருமானம் | 13,500 | 14,614 | 8,719 |

**2.2.2 வருமானச் சேகரிப்பிலான செயலாற்றல்**

-------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது வீதவரியும் வரி மற்றும் வாடகை சேகரிப்பு வருமானம், மதிப்பிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் குறைவைக் காண்பித்த போதிலும் மொத்த வருமானச் சேகரிப்பின் போது 10.33 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டது.

**2.2.3 வீத வரி**

--------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலுவை வீதவரியாக கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 25 ஆம் திகதி வரையிலும் 558 வரிசெலுத்துனரிடமிருந்து ரூபா 363,903 தொகை அதாவது 88 சதவீதம் அறவிடப்படுவதற்கிருந்ததுடன் இதில் இரத்தினபுரியின் பிரதான வீதியின் இருமருங்கிலும் 405 வரி செலுத்துனர்களிடமிருந்து ரூபா 322,812 நிலுவை காணப்பட்டது. மேலும், 82 சதவீதமான ரூபா 1,000 தொகையைப் பார்க்கிலும் கூடுதலான வீதவரிக் கொடுப்பனவைச் கொடுப்பனவு செய்வதைத் தவிர்த்த 83 வரி செலுத்துனர்களின் நிலுவை மீதி ரூபா 297,949 ஆகக் காணப்பட்டது.

(ஆ) இரக்வானை உப அலுவலகத்திற்கு உரித்தான அதிகாரப்பகுதியில் 326 வரி செலுத்துனர்களிடமிருந்து ரூபா 248,087 தொகை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கிருந்தது. ரூபா 2,000 இனைப் பார்க்கிலும் அதிகமான வீதவரி கொடுப்பனவைச் செலுத்தத் தவறும் 25 வரி செலுத்துனர்களின் நிலுவை மீதி ரூபா 69,695 ஆகக் காணப்பட்டது.

## 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

-----------------------------------------------

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கைத்தொழில் வரி, வியாபார வரி, மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய வியாபாரத்தை இனங்காண்பதற்காக வருடாந்த மெய்மையாய்வு கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 25 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் நிறுவகத்திற்கு வியாபாரத்தின் வகையின் படி சேகரிக்கப்படும் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு வருமானப் பதிவேடு பேணப்பட்டிருந்தது.

## 2.2.5 நீர்க் கட்டணம்

----------------------

சபையின் மூலம் நிர்வகிக்கப்படும் இரக்வானை நீர்த் திட்டத்தில் 267 பாவனையாளர்கள் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 108,821 தொகையான நிலுவைத் தொகை அறவிடுவதற்கிருந்ததுடன் இதில் 54 பேரிடமிருந்து ரூபா 500 இனைப் பார்க்கிலும் கூடுதலாக அறவிடுவதற்கிருந்தது. இந் நீர்ச் செயற்திட்டத்திற்காக இரு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் பெரும்பாலான நீர் விநியோகத்திற்கு நீர்மானி பொருத்தப்பட்டு முறையான பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டிராததுடன் நிலுவையான நீர் பட்டியலகள் அறவிடப்படுவதற்காக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.2.6 ஏக்கருக்கான வரி

--------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 244 நபர்களால் நிலுவையான ஏக்கர் வரியாக ரூபா 57,906 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 30,902 தொகையான 53 சதவீதம் ரூபா 500 ஐப் பார்க்கிலும் கூடுதலான நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்குள்ள 27 பேரின் நிலுவை மீதியாக

அவதானிக்கப்பட்டது. மேலும், இரக்வானை உப அலுவலகத்தின் ஏக்கர் வரிப் பதிவேட்டின் படி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 54 வரி செலுத்துனர்களிடமிருந்து ரூபா 22,726 தொகையான ஏக்கர் வரி அறவிடப்படுவதற்கிருந்தது.

### 2.2.7 நீதிமன்ற தண்டப்பணம்

-----------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் எம்பிலிபிட்டிய நீதவான் நீதிமன்றத்தின் மூலம் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானங்கள் 2013 யூலை மாதத்தின் பின்னரும், பல்மதுல்ல நீதவான் நீதிமன்றத்தினால் 2014 திசெம்பர் மாதத்திற்காகவும் இனங்காணப்பட்டு பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.8 ஆதனங்கள் குத்தகைக்கிடல்

-------------------------------------------

(அ) 2009 மார்ச் 09 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் பா.பா.கொ./2009/07 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பிடப்பட்ட குத்தகை திருத்தப்பட வேண்டும். 2009 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டைக் கருத்திற்கொள்ளாது சுற்றறிக்கையின் பிரகாரம் தற்போது மீள மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்படாது தற்போது மீள மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்படாது சபைத் தீர்மானத்தில் மதிப்பீட்டுத் தொகையைப் பார்க்கிலும் குறைந்த தொகைக்கு சபையின் கடைகள் 2015 ஆம் ஆண்டின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆதன வரி செலுத்தப்படுகையில் பா.பா. கொ/ஏ/01 மற்றும் 1998 திசெம்பர் 10 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மாதிரி உடன்படிக்கைப் படிவத்தின் பிரகாரம் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட வேண்டியதுடன் வருடாந்தம் உடன்படிக்கை புதுப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பிரதேச சபை மற்றும் கடை உரிமையாளர்களுக்கிடையே வருடாந்தம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிராததுடன் குறித்த கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய திருத்தப்பட்ட கடை வாடகை தொடர்பான அறிவித்தல்கள் மாத்திரம்

மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் பின்னர் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 பெப்ரவரி மாதம் வரை திருத்தப்பட்ட வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 3.1 முகாமைத்துவத் திறனின்மைகள்

-----------------------------------------------------

ஊழியர் கடன் பதிவேட்டின் படி, இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் 03 ஊழியர்களிடமிருந்து ரூபா 50,000 தொகையான பணம் பெறவேண்டியிருந்தது.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------

2009 திசெம்பர் 22 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் இல. ப.பா.கொ.1/2009 (திருத்தப்பட்ட) சுற்றறிக்கையின் இரண்டாம் பந்தியின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவகத் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் இணைந்த படிப்பணக் கொடுப்பனவு குறித்த உள்ளூராட்சி நிறுவக அதிகாரப் பிரதேசத்திற்கு அப்பால் நிர்வாக நடவடிக்கைகளுக்கு நேரடித் தொடர்புடைய உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கான அங்கீகாரம் தொடர்பாக எவ்வித குறிப்பும் உறுதிப்படுத்தலும் இன்றி 2014 ஆம் ஆண்டின் இணைந்த படிக் கொடுப்பனவாக ரூபா 92,500 தொகை உறுப்பினர்களுக்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. அப் போக்குவரத்துத் தொடர்பாக உள்ள தேவைப்பாடு அல்லது அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு திறமையீனங்கள்

-------------------------------------------

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு (LRC) விடம் உள்ள சபையால் நீண்ட காலமாக அனுபவிக்கப்படும் பவின்ன காணி (பண்ணை) பண்ணையாக அபிவிருத்தி செய்யப்பட்ட போதிலும், அதன் வருமான நிலையில் துரித வீழ்ச்சி நிலவியமை அவதானிக்கப்பட்டது. மேலும், பண்ணை வருமானமும் பராமரிப்பும் தொடர்பாக உயர் கண்காணிப்பு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படாமையும் இதன் காரணமாக இது சபைக்குக் கிடைக்கப்பெறாது போகும் எச்சரிக்கை நிலவுவதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.4 சுற்றாடல் சிக்கல்கள்

------------------------------

தற்போது நிரந்தரமாக சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிக்கு உரியதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ள மாதம்பே மீன் சந்தை தொடர்பாக செயலில் தலையீடு சபையால் மேற்கொள்ளப்படாததுடன் திட்டமிடப்பட்ட மீன் சந்தை வளாகத்தைத் தயார்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது இது வரையில் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. குறித்த இடத்தில் மீன் சந்தை உரிமையாளர்களால் பிரதான வீதிக்கு அருகாமையில் அகற்றப்படும் கழிவுப் பொருட்களின் காரணமாக பிரதேச மக்களுக்கு பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்திருந்தது.

இதன் படி, அந் நிலையான சந்தைத் தொகுதி நிர்மாணிக்கப்படும் வரை தற்போது நிலவும் மீன் சந்தை பொது மக்களுக்கும் சுற்றாடலுக்கும் போதியளவு நன்மை பயக்கும் விதத்தில் நடாத்திச் செல்வதற்காக தலையிட வேண்டிய சபையால் அப் பொறுப்பு மேற்கொள்ளப்படாமையும், சபையின் வருமான முன்னுரிமையாக விருத்தி செய்யப்படக்கூடிய இம் மீன் சந்தையிலிருந்து இது வரையில் எவ்வித வருமானமும் சபைக்குக் கிடைக்கப்பெறாமை மாத்திரமன்றி இது சபையின் கண்காணிப்பிற்கு அப்பால் நிலவுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

### பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------

07 செலவின விடயங்களுக்கு உரித்தாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 2,581,641 தொகை எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்